
Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

15.04.2020 புதன்கிழமை



## கொரோனாவின் புதிய அறிகுறி

கொழும்பு,ஏப்.15
கொரோனாத் தொற்றின் புதிய அறிகுறியாக கால்களில் கொப்புளங்கள் ஏற்படும் என்று ஆஸ்திரேலிய மெல்பன் வெஸ்டன் மருத்துவமனையின் நரம்பியல் பிரிவின் பிரதானியாக பணியாற்றும் இலங்கையின் மருத்துவ பேராசிரியர்

பக்.2

# 8 பேருக்கும் கொரோனா தொற்றியது எப்படி?

### உறுதியாகச் சொல்லமுடியாதென மருத்துவமனைப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 15
காங்கேசன்துறை தனிமைப்படுத்தல் மையத்திலிருந்த 8 பேருக்கும் கொரோனா தொற்று எவ்வாறு ஏற்பட்டது என்பதை உறுதியாகச் சொல்ல முடியாது. இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

பக்.2

## அரியாலைவாசிக்கு வைரஸ் தொற்று மிக அதிகம்

யாழ்ப்பாணம், ஏப். 15
காங்கேசன்துறை தனிமைப்படுத்தல் மையத்தில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானதாக உறுதிப்படுத்தப்பட்ட அரியாலைவாசிக்கு கொரோனா வைரஸ் தொற்று மிக அதிகமாக இருப்பதாக, யாழ்ப்பாணம் போதனா

பக்.2

## ஏறியது ரூபா

கொழும்பு,ஏப்.15
அமெரிக்க டொலருக்கான பெறுமதி அதிகரித்துள்ளதை அடுத்து, இலங்கை ரூபாவின் பெறுமதியும் அதிகரித்துள்ளது. அமெரிக்க டொலர் ஒன்றின் இன்றைய விற்பனை பெறுமதி

பக்.2

## பொறுப்புக்களை கையளித்தார் பருத்தித்துறை அத்தியட்சகர்

யாழ்ப்பாணம், ஏப். 15
பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் அத்தியட்சகர் குகதாசன் தனது பொறுப்புக்களை இன்று காலை கையளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பருத்தித்துறை

பக்.2




## 24 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு

யாழ்ப்பாணம், ஏப். 15
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இன்று மதியம் பரிசோதனைக்காக 24 பேரின் மாதிரிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. காங்கேசன்துறை தனிமைப்படுத்தல் மையத்திலுள்ள 4 பேர், குருநகரில் 9 பேர், முழங்காவிலுள்ள

பக்.2

## சோதனை பொருள்கள் தாராளம்

யாழ்ப்பாணம், ஏப். 15
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தில் இருக்கின்ற பிசிஆர் இயந்திரத்தில் பயன்படுத்துவதற்குத் தேவையான சோதனைப் பொருள்கள் எங்களிடம் இருக்கின்றன. இவ்வாறு

பக்.2

## பாதிப்பு 2,000,000 இறப்பு 127,000!

வுகான், ஏப். 15
கொரோனாவால் உலக அளவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 27 ஆயிரமாக அதிகரித்தது. சீனாவின் கொரோனா வைரஸால் ஒவ்வொரு நாளும் பல்லாயிரம் மக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். தினமும் 5 ஆயிரத்துக்கும் குறையாத உயிரிழப்புக்கள் சம்பவித்துக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் இன்று மாலை 5 மணி வரையிலான நிலவரத்தின்படி உலக அளவில் 20 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு லட்சத்து 27 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். (ம)

## இன்று மீண்டும் சோதனை

யாழ்ப்பாணம், ஏப். 15
காங்கேசன்துறை தனிமைப்படுத்தல் மையத்திலுள்ள கொரோனாத் தொற்று அடையாளம் காணப்படாத 6 பேரில் 4 பேருக்கு இன்று காலை மீண்டும் சோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பக்.2

## ஊரடங்கு தொடர்பில் எதிர்வுகூற முடியாது

### பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 15
யாழ்ப்பாணத்தில் ஊரடங்குச் சட்டம் நீக்கப்படுமா இல்லையா என்பது தொடர்பிலோ அல்லது கொரோனா தொற்றின் எதிர்காலம் தொடர்பிலோ எதிர்வுகூற முடியாது. இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இன்று காலை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார். யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் கொரோனா நோயாளர்கள் 8பேர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் மாவட்டத்தில் ஊரடங்கு நீக்கப்படுமா? இடர்வலயமாக தொடர்ந்து இருக்குமா? என்ற கேள்வி

பக்.2

## மாவட்டம் தாண்டுவோரை தனிமைப்படுத்த வேண்டாம்

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 15
இலங்கையினுள் ஒரு மாவட்டத்தில் இருந்து இன்னொரு மாவட்டத்துக்குச் செல்பவர்களைத் தனிமைப்படுத்த வேண்டாம் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார். அத்தியாவசிய சேவைகள் மாத்திரமே தற்போது இயங்குகின்றன. இந்த

பக்.2

## முழங்காவிலில் கண்டறியப்பட்டோர் இரணவிலவுக்கு

யாழ்ப்பாணம், ஏப். 15
முழங்காவிலிலுள்ள தனிமைப்படுத்தல் மையங்களில் கொரோனா உறுதிப்படுத்தப்பட்ட 4 பேரில் மூவர் ஆண்கள்.

பக்.2

## கிளிநொச்சி மாவட்டத்தவருக்கு கொரோனா இதுவரை இல்லை

### மாவட்டச் செயலர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஏப். 15
கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை எவருக்குமே கொரோனா தொற்று ஏற்படவில்லை. முழங்காவில் நாச்சிக்குடா கடற்படை தனிமைப்படுத்தல்

பக்.2

# 8 பேருக்கும் கொரோனா...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இன்று காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போதகருடன் நெருங்கிய தொடர்பிலிருந்த 20பேர் பலாலிப் பகுதியில் கடந்த 22ஆம் மற்றும் 23ஆம் திகதிகளில் தனிமைப்படுத்தப்பட்டனர். கடந்த முதலாம் மற்றும் மூன்றாம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 6பேர் தொற்றுக்குள்ளானவர்களாக அடையாளப்படுத்தப்பட்டார்கள். அன்றிலிருந்து இரண்டு வாரங்கள் அவர்களைத் தனிமைப்படுத்தி வைத்திருக்கவேண்டும் என்று அப்போது முடிவெடுக்கப்பட்டது. சுமார் 11 நாள்களின் பின்னர் நேற்று மேற்கொண்ட பரிசோதனைகளில் 8 பேர் தொற்றுக்குள்ளானவர்களாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்தத் தொற்றானது எவ்வாறு வந்தது என்று தெளிவாகக் கூற முடியாது. சில வேளைகளில், தொற்று அடையாளம் காணப்பட்ட 6 பேரும் இவர்களுடன் இருந்ததன் காரணமாக அவர்களிடமிருந்தும் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற ஒரு நிலையும் காணப்படுகின்றது. தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்ற பகுதிகளில் ஒருவருக்கு தொற்று ஏற்பட்டால் தொடர்ச்சியாக அவர்கள் இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவையேனும், தொடர்ச்சியாகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு முற்றாகத் தொற்று இல்லை என்பதன் பின்னரே அவர்கள் வெளியில் விடப்படுவார்கள். ஆகவே பொதுமக்கள் இதுபற்றி அச்சமடையத் தேவையில்லை. மதபோதகரின் ஆராதனையில் பங்கேற்ற ஏனையவர்களும் அவர்கள் வசிக்கும் பகுதிகளில் 21 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். அவர்களிடையேயும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அவர்களில் எவருக்கும் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்படவில்லை. நெருங்கிய தொடர்பை பேணியவர்களை முதலில் தனிமைப்படுத்தியதனால் அவர்களுக்கே கூடுதலான தொற்று ஏற்பட அதிக வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். ஆகவே ஏனையவர்களுக்குத் தொற்று ஏற்பட வாய்ப்பு குறைவாக இருந்திருக்கவேண்டும். அதன் காரணமாக அவர்களின் பரிசோதனையிலும் தொற்று ஏற்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது. இருப்பினும், யாராவது ஒருவருக்கேனும் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சலனங்கள் மக்களிடையே நிலவலாம். அந்த அச்சங்களை எங்களால் முழுமையாகப் போக்கிவிட முடியாது. அது மாத்திரமல்ல நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு வராது என்பதையும் கூறி விட முடியாது.

வவுனியா மருத்துவமனை ஊழியர் ஒருவரும் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். அவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் வவுனியா மருத்துவமனையில் எவ்வாறான நிலைமை இருக்கும் என்பதை என்னால் கூற முடியாது. அவர் கடந்த 22ஆம் அல்லது 23ஆம் திகதி காங்கேசன்துறை தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டதால் நீண்ட நாட்கள் ஆகிவிட்டன. அதற்கு முன்னர் உள்ள தொடர்புபற்றி ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும்- என்றார். (ஒ,5,105)

# முழங்காவிலில்...

ஒருவர் பெண். இவர்கள் மேலதிக சிகிச்சைக்காக புத்தளம் இரணவில பகுதிக்கு இன்று காலை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். இவர்கள் அனைவரும் ராகம மற்றும் வெலிசறை மருத்துவமனைப் பணியாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,5,105)

# ஊரடங்கு தொடர்பில்...

கள் ஊடகவியலாளர்களால் பணிப்பாளரிடம் எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த அவர், இடர் வலயமாக அறிவிப்பது நாங்கள் அல்ல. இது தொடர்பில் சிறப்புச் செயலணி உள்ளது. சுகாதார அமைச்சு அதிகாரிகள், அரச உயர் அதிகாரிகள் செயற்படுகின்றார்கள். அவர்களுக்கு இங்குள்ள நிலைமைகள் தொடர்பில் எங்கள் கருத்துக்களை முன்வைக்கின்றோம். அதன் அடிப்படையில் அவர்கள்தான் முடிவெடுக்கின்றார்கள்.

ஊரடங்கு பற்றி அல்லது நோயின் எதிர்காலம் பற்றி சரியாகக் கூறிவிட முடியாது. அதனைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். ஏனெனில் கொரோனா தொற்று உலகளாவிய ரீதியில் எல்லோருக்கும் பதற்றத்தை ஏற்படுத்துகின்றது. வடபகுதியில் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை குறைவு என்பதோடு, ஏற்கனவே தனிமைப்படுத்தப்பட்ட வலயத்திலிருந்தே கொரோனா நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றார்கள். இதனால் எமது சூழலில் இப்போது பரவவில்லை என்பது தெரிகின்றது. நாங்கள் ஓரளவு பாதுகாப்பாக இருக்கின்றோம். இருப்பினும் நாங்கள் அவதானமாக நடந்து கொள்ளவேண்டும், என்றார். (ஒ,5,105)

# கொரோனாவின் புதிய...

திஸ்ஸ விஜேரத்ன தெரிவித்துள்ளார். ஸ்பெய்னில் கால்கள் தொடர்பான நிபுணர்களின் தேசியக் கூட்டத்தில் இது தொடர்பான முதலாவது அறிக்கை வெளியிடப்பட்டது. சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் சில சந்தர்ப்பங்களில் முதியவர்களுக்கும், கொவிட்19 தொற்று அறிகுறியாக கொப்புளங்கள், கொரோனா நோயாளர்களிடம் அவதானிக்க முடியும். இது எண்ணிக்கை அடிப்படையில் ஒவ்வொரு நோயாளிகளுக்கு உள்ளதாகக் குறிப்பிடப்பட்டதே தவிர, விகிதாசார அடிப்படையிலான அறிகுறிகள் என்று ஸ்பெய்ன் நிபுணர்களால் வெளிப்படுத்தப்படவில்லை என்று பேராசியரியர் திஸ்ஸ விஜேரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (க)

# ஏறியது...

195.78 ரூபாவாகப் பதிவாகியுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. கடந்த சில நாள்களாக இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# சோதனை...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மூன்று நாள்களுக்கு ஒரு தடவை கொழும்பு சுகாதார அமைச்சு எங்களுக்குத் தேவையான பரிசோதனைப் பொருள்களைத் திரும்பத் திரும்ப வழங்கிக் கொண்டிருக்கின்றது. எங்களிடம் ஓரளவு சோதனைப் பொருள்கள் கையிருப்பில் இருக்கின்றன. அது முடிய முடிய நாங்கள் பெற்றுக் கொள்கின்றோம். இன்னும் ஒரு சில வாரங்களில் எமது மருத்துவமனையில் உள்ள பிசிஆர் இயந்திரத்தையும் இயக்கவிருக்கின்றோம். எமது பகுதிகளில் கூடுதலான சோதனைகளைச் செய்யுமாறு சுகாதார அமைச்சு எங்களுக்கு பணிப்புரை வழங்கியிருக்கின்றது. அதனால் மருத்துவமனையிலும் பரிசோதனைகளை ஆரம்பிக்கவுள்ளோம். இதன் ஊடாக ஒரு நாளைக்கு ஆகக் கூடியது 144 பேருக்கு சோதனை செய்ய முடியும், என்றார். (ஒ,5,105)

# மாவட்டம் தாண்டுவோரை

நிலையில் வடக்கு மாகாணத்தில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மருத்துவர்கள், தாதியர்கள் பலர் பணியாற்றுகின்றனர். அவர்களில் ஒரு தொகுதியினர் இப்போது விடுமுறையில் தமது சொந்த இடங்களுக்குச் சென்றுள்ளனர். அரசால் அறிவிக்கப்பட்ட இடர் மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் தமது ஊருக்குத் திரும்பியுள்ளனர்.

இந்த நிலையில் அவர்கள் மீண்டும் பணிக்குத் திரும்பும்போது தனிமைப்படுத்தப்படுவார்களா என்ற கேள்வி, வடக்கில் பணியாற்றும் மருத்துவத்துறையினரிடம் எழுந்துள்ளது. இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரனிடம் கேட்டபோது, அவர்கள் தனிமைப்படுத்தப்பட மாட்டார்கள். இலங்கையினுள் ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்துக்குச் செல்பவர்களை தனிமைப்படுத்த வேண்டாம் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் கடந்த வாரம் சுற்றறிக்கை ஊடாக அறிவுறுத்தியுள்ளார், என்றார். (ஒ,5)

# வைரஸ் தொற்று மிக அதிகம்..

மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

காங்கேசன்துறை தனிமைப்படுத்தல் மையத்தலிருந்த, சுவிஸ் மதபோதகருடன் மிக நெருக்கமாக 4 நாள்கள் தொடர்ச்சியாகத் தொடர்பிலிருந்த அரியாலைவாசிக்கு கடந்த மூன்றாம் திகதி மேற்கொள்ளப்பட்ட சோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை. இந்த நிலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவருக்கு ஏனையோருடன் ஒப்பிடுகையில் வைரஸ் தொற்று மிக அதிகமாக உள்ளதாக, மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ,5)

# பொறுப்புக்களை...

ஆதார மருத்துவமனையின் அத்தியட்சகர் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை என்று தெரிவித்தும், அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்தும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சிடம் முறைப்பாடு செய்திருந்தது. இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு வசதியாக, அத்தியட்சகரை யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு இடமாற்றுமாறு சுகாதார அமைச்சு நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தது. இருப்பினும் அவர் தனது பொறுப்புக்களை நேற்றைய தினம் கையளித்திருக்கவில்லை. இன்று காலையும் பொறுப்புக்களை கையளிக்காவிட்டால், அவருக்கு எதிராக பருத்தித்துறை மருத்துவமனை மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவார்கள் என்று நேற்று இரவு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்திருந்தது. இந்த நிலையில் அவர் இன்று காலை தனது பொறுப்புக்களை கையளித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,5)

# 24 பேரின் மாதிரிகள்..

தனிமைப்படுத்தல் மையத்திலுள்ள 7 பேர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டுள்ள 4 பேர் என்று 24 பேருக்கு நேற்றுச் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ஒ,5)

# இன்று மீண்டும்...

தனிமைப்படுத்தல் மையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த 20 பேரில் 6 பேருக்கு கடந்த முதலாம் மற்றும் மூன்றாம் திகதிகளில் கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. எஞ்சிய 14 பேரில் 8 பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது நேற்று உறுதிப்படுத்தப்பட்டது. தற்போது மீதமுள்ள 6 பேரில் 4 பேரின் மாதிரிகள் இன்று காலை பரிசோதனைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. (ஒ,5)

# கிளிநொச்சி மாவட்டத்தவருக்கு

நிலையத்தில் அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்கள் எவருமே கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

ஜாஎல, மட்டக்குளி, ராகம பகுதிகளைச் சேர்ந்த 32 பேர் கிளிநொச்சி முழங்காவில் நாச்சிக்குடா கடற்படை தனிமைப்படுத்தல் முகாமுக்கு கடந்த 13ஆம் திகதி அழைத்து வரப்பட்டிருந்தனர். இவர்களில் ஆறு பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தநிலையில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கே கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாக தவறான செய்தி மக்கள் மத்தியில் பரப்பப்பட்டுள்ளது. இதனால் இங்குள்ள மக்களிடம் அச்சம் ஏற்பட்டுள்ளது. இது பற்றிக் கேட்டபோது, மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரைக்கும் எவருக்குமே கொரோனாத் தொற்று ஏற்படவில்லை. அதற்கான சாத்தியப்பாடுகள் குறைவாகவே காணப்படுகின்றன. எனவே மக்கள் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாம். சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனைகளைப் பின்பற்றி நோய் வரும்முன் காக்கும் பணிக்கு ஒத்துழைப்புத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்- என்றார். (த-214)

# அபாயக் கட்டத்தை தாண்டும் இலங்கை

கொழும்பு,ஏப்.15

கொரோனா வைரஸ் தாக்கம் இலங்கையில் அபாய கட்டத்தைத் தாண்டிக் கொண்டிருக்கிறது. எனவே, வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர வேண்டும். இல்லையேல் எந்த நேரத்திலும் நிலைமை மாறக்கூடும்.

இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி அனில் ஜாசிங்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சமூகம் மத்தியில் கொரோனா வைரஸ் பரவக்கூடிய அபாயம் நாட்டில் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. கடந்த ஐந்து நாள்களில் சமூகத்திலிருந்து புதிய நோயாளிகள் அடையாளம் காணப்படவில்லை. தனிமைப்படுத்தல் முகாம்களில் மருத்துவ கண்காணிப்பின் கீழ் இருந்தவர்கள் மற்றும் முடக்கப்பட்ட பகுதியில் கொரோனா நோயாளிகளுடன் தொடர்பை பேணியவர்களுக்கே வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கை அபாயக் கட்டத்தைத் தாண்டிவிட்டதா என்பது குறித்து மிகவும் துல்லியமாகக் கருத்து வெளியிடமுடியாது. எனினும், நிபுணர்களின் கருத்துகளின் அடிப்படையில் அபாயக் கட்டத்தை தாண்டிக் கொண்டிருக்கின்றோம்.

ஆனாலும் சமூக இடைவெளி உள்ளிட்ட விடயங்கள் தொடர்ந்தும் பின்பற்றப்பட வேண்டும். ஊரடங்கு வேளையில் நிலைமையைக் கட்டுப்படுத்துவது இலகுவாக இருக்கும்.

ஆகவே, ஊரடங்கு தளர்த்தப்பட்ட பின்னரும் இதேபோன்று இறுக்கமான நடை முறையை பின்பற்றுவதற்கான வேலைத்திட்டம் அவசியம். அப்போதுதான் சாதகமான பெறுபேறு கிட்டும் என்றார். (க-44)

## பருத்தித்துறையில் தீவிர சோதனை

மருதங்கேணி, ஏப். 15

ஊரடங்கு விதிகளை மீறி நடமாடுவோரைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பருத்தித்துறையிலும் பொலிஸார் தீவிர சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

வீதி எங்கும் பல்வேறு இடங்களில் குழுக்களாகப் பிரிந்து இந்தச் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். பலர் ஊரடங்குச் சட்டத்தை மீறி நடமாடிய காரணத்துக்காக கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (த-160)

## தந்தையை கொன்ற மகன்!

அநுராதபுரம், ஏப். 15

தாயுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்த தந்தையின் கழுத்தை வெட்டி, மகன் கொலை செய்த சம்பவம், அநுராதபுரம் கல்னேவ பொலிஸ் பிரிவு, கறுவலகஸ்வெள சேனபுர பகுதியில் நேற்று இடம் பெற்றுள்ளது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 51 வயதுடையவரே உயிரிழந்துள்ளார். அவர் தனது மனைவியுடன் அடிக்கடி சண்டையிடுபவர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றிரவும் மதுபோதையில் வந்த குறித்த நபர், மனைவியுடன் சண்டையிட்டார் என்றும் இதனால் ஆத்திரமடைந்த மகன் தந்தையின் கழுத்தை வெட்டிக் கொலை செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-114)

## போதைப்பொருள் கடத்திய 'போலி' சமுர்த்தி அலுவலர்

அம்பாறை,ஏப்.15

சமுர்த்தி அலுவலக அடையாள அட்டையைப் பயன்படுத்தி போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் சம்மாந்துறைப் பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சம்மாந்துறைப் பொலிஸாரால் தற்காலிகமாக ஒலுவில் நிந்தவூர் பிரதான வீதியில் அமைக்கப்பட்ட சோதனைச்சாவடியில் வைத்தே நேற்று அதிகாலை இவர் கைது செய்யப்பட்டார்.

இவர் அட்டாளைச்சேனையில் இருந்து நிந்தவூர் பகுதிக்கு போதைப் பொருள்களை கடத்தி வந்தார் என்று பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

குறித்த சந்தேக நபர் சமுர்த்தி அலுவலக அடையாள அட்டையை பயன்படுத்தி பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபடுவதாகவும்,இரு வருடங்களுக்கு முன்னர் சமுர்த்தி அலுவலர் பதவியிலிருந்து நீக்கப்பட்டவர் எனவும் பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்திருந்தன. அதன் அடிப்படையிலேயே அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.(ஐ)

## குழந்தைகளுக்கு தடுப்பூசி அடுத்த வாரம்

கொழும்பு, ஏப்.15

குழந்தைகளுக்கான அத்தியாவசியத் தடுப்பூசிகளை ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும் என்று கொழும்பு சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கான திரிபோஷா, விற்றமின் வகைகளையும் வீடுகளுக்கே சென்று வழங்குவதற்கான வேலைத்திட்டம் குறித்தும் சுகாதார அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது. இதுதொடர்பில் பிரச்சினைகள் இருப்பின் 072 280 95 77 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்க முடியும் என்று சுகாதார அமைச்சின் செயலாளர் பத்ராணி ஜயவர்தன தெரிவித்துள்ளார். (ப)

# நாடாளுமன்றை கலைத்தபோது நாட்டில் கொரோனா இல்லை

## அமைச்சர் விமல் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.15

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் முடிவை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச எட்டியபோது, கொரோனா வைரஸ் தாக்கம் நாட்டில் இருக்கவில்லை என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகம் மூலம் தனது கருத்துக்களை வெளிப்படுத்திய அமைச்சர், அது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது;

ஜனாதிபதி சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசியலமைப்புக்கும் ஏற்ப நாடாளுமன்றத்தைக் கலைத்தார். அதன் படி நாடாளுமன்றத்தைக் கலைக்கும் வர்த்தமானியில் வேட்புமனுத் தாக்கல் தொடர்பான திகதி மற்றும் அடுத்த தேர்தலுக்கான அறிவிப்பும் உள்ளடக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு பின்பற்றிய நடவடிக்கை குறித்து பிரச்சினைகள் எழுந்துள்ளன. இருப்பினும் பொதுத் தேர்தலை காலவரையின்றி



ஒத்திவைக்க ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லை என்று சட்ட வல்லுநர்கள் கூறியுள்ளனர். தேர்தலை ஒத்திவைக்கும் போது தேர்தலை நடத்துவதற்கான திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிக்க வேண்டும் என்று சட்ட வல்லுநர்கள் கூறியுள்ளனர். ஆனால் இது வரை இந்த விடயம் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு பதில் வழங்கவில்லை. இதேவேளை அவசர காலச் சட்டம் நாட்டில் நடைமுறைப் படுத்தப்பட்டதால் மட்டுமே நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள பழைய நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டும் அதிகாரம் ஜனாதிபதிக்கு காணப்படுகின்றது என்றார். (ப)

## கசிப்புக் காய்ச்சிய நால்வர் சிக்கினர்

கண்டி, ஏப். 15

கண்டி பூஜாபிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கசிப்புக் காய்ச்சிய குற்றச்சாட்டில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். கசிப்புக் காய்ச்சுவதற்கான உபகரணங்களையும் மீட்டுள்ளோம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், மேற்கொண்ட விசாரணையின்போது, ஓர் இடத்தில் இருவரும் மற்றுமோர் இடத்தில் இருவருமாக மொத்தம் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் நீதிவானிடம் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-114)



## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு,ஏப்.15

மோதல் சம்பவத்தில், நபரொருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தார். இந்தச் சம்பவம் மஹஓய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 69 ஆம் சந்திப் பகுதியில் நடந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டையடுத்து, பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (க-114)

# 1,587 மெட்ரிக் தொன் நெல் திருமலையில் கொள்வனவு

மூதூர், ஏப். 15

அரச நெல் கொள்வனவுத் திட்டத்தின் கீழ் 2019/2020 பெரும் போகத்தில் திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக 2ஆயிரத்து 587மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக 135 மில்லியன் ரூபா வரையில் செலவிடப்பட்டதாக மாவட்டச் செயலர் ஜே.எஸ்.டி.எம்.அசங்க அபேவர்தன தெரிவித்தார்.

கொள்வனவுசெய்யப்பட்ட நெல் மாவட்டத்திலுள்ள 14 அரிசி ஆலைகளிலும், நெல் சந்தைப்படுத்தும் சபைக்குரிய 7களஞ்சியசாலைகளிலும் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றைக் குற்றி பாவனைக்கு வழங்குவதற்கான அனுமதி அரசிடமிருந்து கிடைத்ததும் அது தொடர்பான மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அத்துடன், 2020 சிறுபோகத்தில் மாவட்டத்தில் மொத்தமாக 21ஆயிரத்து 500ஹெக்ரேயர் அளவில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. மொரவெவ பெருநீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் இந்தமுறை தண்ணீர்த் தட்டுப்பாடு காரணமாக 800 ஏக்கரில் மறுபயிர்ச் செய்கை மட்டும் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சிறுபோக பயிர்ச்செய்கைக்கு யூரியா 4ஆயிரத்து 600மெற்றிக் தொன், ரி.எஸ்.பி. 573 மெற்றிக்தொன், எம்.ஓ.பி ஆயிரத்து 220 மெற்றிக் தொன் என தேவையான உரம் விவசாயிகளுக்கு வழங்க கையிருப்பில் உள்ளது. தேவையான விவசாயிகள் உரிய கமநல சேவைகள் நிலையங்களில் பெற்றுக் கொள்ளமுடியும்.

அத்துடன் 'சௌபாக்யா' திட்டத்தின் மூலம் இதுவரை 4ஆயிரம் விவசாயிகளுக்கு பயிர்க் கன்று மற்றும் மரக்கறி விதை பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் விவசாயிகள் தமது உணவுத்தேவைகளை தாமே பயிர்செய்து பூர்த்தி செய்ய முடியும் என்றும் மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்தார். (த-40)

## தோப்புக்கரண பொலிஸாருக்கு மீண்டும் பணி

கொழும்பு, ஏப்.15

ஊரடங்குச் சட்டத்தை மீறிய இருவரை தோப்புக் கரணம் போடச் செய்தமைக்காக பணி இடைநீக்கப்பட்டிருந்த இரண்டு பொலிஸாரும் மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தை மீறிய இருவரை கொழும்பு மருதானை, டார்லி வீதியில் வைத்து மறித்த பொலிஸார், அவர்களுக்குத் தண்டனையாக இருவரையும் தோப்புக்கரணம் போடுமாறு கட்டளையிட்டனர். கடந்த 12ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றிருந்தது. இது குறித்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் பணி இடைநீக்கப்பட்டனர். எனினும் அவர்கள் தற்போது சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என, பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். (ப)

## தென்மராட்சியில் மங்கல நிகழ்வுகளுக்கு ஜூன் 30 வரை தடை

சாவகச்சேரி, ஏப். 15

தென்மராட்சியில் மங்கல நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்குவது ஜூன் 30 ஆம் திகதி வரை நிறுத்தப்பட்டுள்ளது என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் தெரிவித்துள்ளனர்.

அமங்கல நிகழ்வுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ள அளவில் உறவினர்கள் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்படுகின்றது.

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்கு வகையில் மக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்க்கும் முகமாக திருமணம், புதுவீடு, பூப்புனித நீராட்டு போன்றனவற்றை நடத்த அனுமதி வழங்கப்படமாட்டாது. இறப்புச் சடங்குகளை நடத்தும்போது குறைந்த அளவு உறவினர்கள் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. அனுமதியை மீறிச் செயற்படுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(த-9)

## இராணுவ அதிகாரிக்கு நேற்று கத்திக் குத்து

கொழும்பு, ஏப்.15

கத்திக் குத்துக்கு இலக்காகி இராணுவ அதிகாரி ஒருவர் படுகாயமடைந்துள்ளார். அவர் காலிகராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பத்தேகம அம்பேகம பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்றது. தாக்குதலுக்கு இலக்கான இராணுவ அதிகாரி அம்பேகம பகுதியைச் சேர்ந்தவர் என்பதுடன், தாக்குதல் மேற்கொண்ட நபரும் குறித்த பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் முழுமையான தகவல்கள் வெளிவரவில்லை. பத்தேகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். தாக்குதல் மேற்கொண்ட நபர் தப்பிச் சென்றுள்ள நிலையில், சந்தேகநபரைக் கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ப)

## பட்டாசு விபத்துக்கள் இம்முறை இல்லை

கொழும்பு,ஏப்.15

நேற்றுமுன்தினம் அமைதியான முறையில் பிறந்த தமிழ், சிங்கள புத்தாண்டில் இம்முறை பட்டாசுகளால் எவ்வித விபத்துகளும் பதிவாகவில்லை என்று சுகாதார பிரிவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் புத்தாண்டுக் காலத்தில் விழுந்து விபத்துக்குள்ளானமை தொடர்பில் 23 சம்பவங்களும், வீட்டு விபத்துகள் தொடர்பில் 20 சம்பவங்களும், மோதல் தொடர்பில் 11 சம்பவங்களும், வீதி விபத்துகள் தொடர்பில் 6 சம்பவங்களும், விளையாட்டின் போது 2 விபத்துகளும், 20 ஏனைய விபத்துகளும் பதிவாகியுள்ளதாக, சுகாதாரப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ-114)



## மினி சூறாவளி 126 பேர் பாதிப்பு

கொழும்பு, ஏப். 15

நோர்வூட் சென்ஜோன் டிலரி தோட்டத்தில், நேற்று மாலை வீசிய கடுங்காற்றுடன் கூடிய மழை காரணமாக, பல வீடுகளின் கூரைகள், காற்றில் தூக்கி வீசப்பட்டுள்ளன. இதனால் 27 குடும்பங்களைச் சேர்ந்த 126 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முழுமையாகப் பாதிக்கப்பட்ட 5 குடும்பங்களைச் சேரந்த 26 பேர், தற்காலிகமாக அந்தப் பகுதியிலுள்ள முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வீடுகளில் இருந்த பொருள்களும் சேதமடைந்துள்ளன என்று பாதிக்கப்பட்டவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண உதவிகளை கிராம அதிகாரிகள் செய்து வருகின்றனர். மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர். (த-114)

## 'கிளீனர்' என்ற போர்வையில் பிற மாவட்டத்தவர் வருகையா?

### வாகனச் சாரதிகளுக்கு சுகாதார திணைக்களம் கடும் எச்சரிக்கை

சாவகச்சேரி, ஏப். 15

அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றிவரும் வாகனங்களில் அதிக கட்டணம் பெற்று வெளிமாவட்டத்தில் தங்கியுள்ளவர்களை ஏற்றிவரும் வாகனச் சாரதிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் எச்சரித்துள்ளனர்.

தென்பகுதியிலிருந்து அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றி வரும் வாகனங்களில் உதவியாளர் (கிளீனர்) எனக் கூறி வெளிமாவட்டங்களில் தங்கியுள்ளவர்களை அதிக அளவில் கட்டணம் அறவிட்டு ஆனையிறவு ஊடாக அழைத்து வருகின்றனர் என்று தகவல் கிடைத்துள்ளது.

அவ்வாறு வருபவர்களையும் அவ்வாறு முன்னரே யாராவது அழைத்து வந்திருந்தால் அவர்களையும் வாகனங்களில் ஏற்றிவரும், ஏற்றிவந்த சாரதிகள் தனிமைப்படுத்தல் முகாம்களில் ஒப்படைக்கவேண்டும்.

அவ்வாறு செய்யாத சாரதிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். பின்னர் தெரியவந்தாலும் தப்பமாட்டார்கள் என்றும் எச்சரித்துள்ளனர். (த-9)

# மேல் மாகாணத்தில் கொரோனா உச்சம்

கொழும்பு,ஏப்.15

மேல்மாகாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 118 ஆக உயர்வடைந்துள்ளது.

இதன்படி கொழும்பு மாவட்டத்தில் 47 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 45 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 26 பேரும் வைரஸ் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தில் 35 பேரும், யாழ்ப்பாணத்தில் 13 பேரும் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக ஏப்ரல் 4 ஆம் திகதிக்கு பின்னர் நேற்று முன்தினம் யாழில் 8 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

அத்துடன், கண்டி மாவட்டத்தில் 7 பேரும், இரத்தினபுரி மாவட்டத்தில் ஐவரும், குருணாகலையில் இருவரும், மாத்தறையில் இருவரும், அம்பாறையில் இருவரும் கேகாலையில் இருவரும் வைரஸ் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். காலி, மட்டக்களப்பு, பதுளை ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவர் வீதம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை இலங்கையில் கடந்த மார்ச் 11 முதல் இன்று முற்பகல் 10 மணி வரையான காலப்பகுதியில் கொழும்பு உட்பட 14 மாவட்டங்களில் 233 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞான பிரிவு தெரிவித்துள்ளது. இவர்களில் ஏழு பேர் உயிரிழந்துள்ளதுடன், 63 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

163 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். வைரஸ் தொற்றுக்கு இலக்காகியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் 144 பேர் மருத்துவக் கண்காணிப்பில் இருந்து வருகின்றனர்.

233 என்ற எண்ணிக்கைக்குள் சீனப் பெண்ணொருவரும் உள்ளடங்குகிறார். அவர் சிகிச்சைகளின் பின்னர் நாடு திரும்பியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, வைரஸ் தொற்றுக்கு இலக்கான இலங்கையர்களின் எண்ணிக்கை 232 ஆகும்.

நுவரெலியா, மாத்தளை, அம்பாந்தோட்டை, மொனராகலை, அநுராதபுரம், பொலன்னறுவை, திருகோணமலை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய 11 மாவட்டங்களில் இன்னும் எவரும் வைரஸ் தொற்றால் பாதிக்கப்படவில்லை. (சு-44)

## சர்வதேச நாணய நிதியத்தின் கடன் இலங்கைக்கு இல்லை

கொழும்பு, ஏப்.15

கொரோனா வைரஸ் தொற்றுநோயிலிருந்து தம்மை மீட்டுக்கொள்ள சகல நாடுகளும் செயற்பட்டு வருகின்ற நிலையில் வளர்ச்சி கண்டுவருகின்ற நாடுகளுக்கு உதவும் விதத்தில் சர்வதேச நாணய நிதியத்தால், கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் சர்வதேச நாணய நிதியத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட 25 நாடுகளில் இலங்கை உள்வாங்கப்படவில்லை.

இதில் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து மறுசீரமைக்கப்பட்ட பேரழிவு கட்டுப்பாடு மற்றும் நிவாரண அறக்கட்டளையின் கீழ் அதன் உறுப்பு நாடுகளில் சிரமப்படும் நாடுகளுக்கான நிதி நிவாரண உதவிகளை வழங்க நேற்று முன்தினம் சர்வதேச நாணய நிதியம் ஒப்புதல் வழங்கியது. அவ்வாறான நாடுகளுக்கு அடுத்த ஆறுமாத காலத்துக்கு அவர்களின் கடன் மற்றும் பொருளாதாரத் தன்மைகளை மீட்டெடுக்க சர்வதேச நாணய நிதியத்தின் மூலமாக மானியங்களை வழங்கவும், மேலும் பல உதவிகளை முன்னெடுக்கவும், அவசர மருத்துவ மற்றும் பிற நிவாரணங்களை வழங்கவும் இவ்வாறு 25 நாடுகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன என்று சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார். அந்த வகையில் இவ்வாறு கடன் நிவாரணங்களைப் பெறும் நாடுகளாக ஆப்கானிஸ்தான், பெனின், புர்கினா பாசோ, மத்திய ஆபிரிக்க குடியரசு, சாட், கொமொரோஸ், கொங்கோ, டி.ஆர், காம்பியா, கினியா, கினியாபிசாவு, ஹைட்டி, லைபீரியா, மடகஸ்கர், மலாவி, மாலி, மொசாம்பிக், நேபாளம், நைஜர், ருவாண்டா, சாவோ டோமே மற்றும் பிரின்சிப், சியரா லியோன், சொலமன் தீவுகள், தஜிகிஸ்தான், டோகோ மற்றும் ஏமன் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன.

இருப்பினும் இலங்கை இந்தப் பட்டியலில் இடம்பிடிக்கவில்லை. இலங்கையின் சுகாதார வேலைத்திட்டங்கள் தொடர்பாக கொண்டுள்ள நம்பிக்கை மற்றும் இலங்கை கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்கள் என்பவற்றை கருத்தில் கொண்டு இந்த நிதி ஒதுக்கீடு கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. (ப)



பிற இடங்களில் இருந்து கிளிநொச்சி மாவட்டத்துக்கு வருகை தரும் வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் தொற்று நீக்கிய பின்னர் அனுமதிக்கப்படுகின்றனர். நிறைவாழ்வு சிறுவர் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று காலை தொடக்கம் முறிகண்டி பகுதியில் அமைந்துள்ள சோதனைச்சாவடியில் குறித்த செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. (ஐ-6)

## வவுனியா வைத்தியசாலை ஊழியருக்கும் கொரோனோ

வவுனியா,ஏப்.15

யாழில் இடம்பெற்ற ஆராதனைக் கூட்டத்தில் கலந்துகொண்ட வவுனியா வைத்தியசாலையில் பணிபுரியும் ஊழியர் ஒருவருக்கு கொரோனோத் தொற்று உறுதியாகியுள்ளது.

காங்கேசன்துறை தனிமைப்படுத்தல் மையத்தில், கொரோனாத் தொற்று உள்ளது என்று கண்டறியப்பட்ட எட்டுப்பேரில் வவுனியா வைத்தியசாலை ஊழியரும் ஒருவராவார். குறித்த ஊழியர் சுவிஸ் போதகரால் யாழ்பாணம் அரியாலையில் நடத்தப்பட்ட ஆராதனைக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தார். இந்த நிலையில் சுவிஸ்நாட்டைச் சேர்ந்த போதகருக்கு கொரோனோ வைரஸ்தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில், அரியாலையில் இடம்பெற்ற ஆராதனைக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த வடக்கின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர். வவுனியா வைத்தியசாலையில் பணிபுரியும் குறித்த நபர் உட்பட சுவிஸ் மதபோதகருடன் நெருங்கி பழகிய 20 பேர் அடையாளம் காணப்பட்டு யாழ்ப்பாணம், காங்கேசன்துறையில் அமைந்துள்ள தனிமைப்படுத்தலில் முகாமில் கடந்த மாதம் 23 ஆம் திகதியிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். குறித்த நபர் ஆராதனைக் கூட்டத்தில் கலந்துகொண்டதால், அவருடன் இணைந்து பணியாற்றிய மேலும் சில ஊழியர்களும் கடந்த சில நாள்களாக சுய தனி மைப் படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ப-110)

## பிள்ளைகளை கொன்ற தந்தைக்கு மறியல்

மட்டக்களப்பு, ஏப். 15

மட்டக்களப்பு மாவட்டத்தின் மாவடிச்சேனையில் இரண்டு பிள்ளைகளையும் கிணற்றினுள் வீசிக் கொலைசெய்த குற்றச்சாட்டில் பிள்ளைகளின் தந்தையை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு வாழைச்சேனை நீதிவான் எச்.எம்.முஹமட் பஸீல் உத்தரவிட்டுள்ளார்.

மாவடிச்சேனை பாடசாலை வீதியில் வசிக்கும் அஸிமுல் ஹக் (வயது 10), அஸிமுல் தாஹியா (வயது 07) ஆகிய இரண்டு குழந்தைகள் நேற்றுச் செவ்வாய்கிழமை நள்ளிரவு அதே வீட்டு கிணற்றில் வீசி கொல்லப்பட்டிருந்தனர். அவர்களைக் கொலைசெய்த குற்றச்சாட்டில் அவர்களுடைய தந்தை முகம்மது லெப்பை சுலைமா லெப்பை (வயது 46) கைது செய்யப்பட்டிருந்தார். (து-150)

# உணவுக்கு அலையும் கட்டாக்காலி நாய்கள்

யாழ்ப்பாணம், ஏப். 15

ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால், கட்டாக்காலி நாய்கள் உணவின்றி வீதிகளில் அலைந்து திரிகின்றன. சில இடங்களில் பட்டினியால் அவை இறந்துவிடுகின்றமையையும் அவதானிக்க முடிகின்றது.

ஹொட்டல்கள், உணவுக்கடைகள், தேநீர்க்கடைகளை நம்பி இதுவரைகாலமும் வாழ்ந்து வந்த தெரு நாய்களே இவ்வாறு இறந்துவருகின்றன. எனவே பொதுமக்கள், தாய்மார்கள் அன்றாட உணவுத் தயாரிப்பில் ஈடுபடும்போது இத்தகைய நாய்கள் மீதும் இரக்கம் காட்ட வேண்டும்.

இதன் மூலமாக உணவின்றி இறக்கும் அவல நிலையை எதிர்காலத்தில் ஓரளவு தவிர்க்கலாம். அத்துடன் கடும் வறட்சியான சூழல் நிலவுவதால் உணவழிக்கும் இடத்தில் சிறு குவளைகளில் தண்ணீர் அருந்துவதற்கும் ஏற்ற சூழலை உருவாக்கி,தெருநாய்கள் பிழைப்பதற்கு வழியேற்படுத்தலாம். யாழ்ப்பாண மாவட்டத்தில் 990க்கும் மேற்பட்ட சனசமூக நிலையங்களும், கிராம அபிவிருத்திச் சங்கங்களும் உள்ளன.

இத்தகைய அமைப்புக்களும் நாய்கள் விடயத்தில் கவனம் செலுத்தலாம் என்று ஆலோசனை தெரிவிக்கப்படுகின்றது. (சு-50)





யாழ்ப்பாணம் மருதடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று உள்வீதியில் நடைபெற்றது. இன்றைய தீர்த்தத்திருவிழாவும் உள்வீதி திருமஞ்சணக் கிணற்றில் நடைபெற்றது. (க)

## ஊரடங்கால் பாதிக்கப்பட்ட விவசாயிகளிடமிருந்து
# 9 லட்சம் கிலோகிராம் மரக்கறி கொள்வனவு

கொழும்பு, ஏப்.15

ஜனாதிபதி செயலணியின் பங்களிப்புடன் நடைமுறைப்படுத்தப்பட்ட மரக்கறிகளைக் கொள்வனவு செய்யும் அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தின் மூலம் ஏப்ரல் மாதம் 11,12ஆம் திகதிகளில் 9 இலட்சம் கிலோகிராமுக்கும் மேற்பட்ட அளவில் மரக்கறி வகைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

அத்தியாவசிய சேவைகளுக்கான விசேட ஜனாதிபதி செயலணியின் நடவடிக்கை தொடர்பாக அரசாங்க தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் நாலக கலுவேவ இன்று கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றை அகற்றுவதற்காக அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தேசிய வேலைத்திட்டம் மற்றும் அதற்கமைவாக நாட்டில் அனைத்து அத்தியாவசிய சேவைகளையும் தொடர்ச்சியாக முன்னெடுப்பதில் அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தியுள்ளது. இதற்கமைவாக, மரக்கறி மற்றும் பழவகைகளை கொள்வனவு செய்யும் விசேட வேலைத்திட்டமொன்று அத்தியாவசிய சேவைகளுக்கான விசேட ஜனாதிபதி செயலணியின் பங்களிப்புடன் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு, நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்குச் சட்டத்தில் தமது உற்பத்தியை விற்பனை செய்வதில் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள விவசாய மக்களுக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் தமிழ் சிங்களப் புத்தாண்டு மற்றும் உயிர்த்த ஞாயிறு ஆகிய காலப்பகுதியில் மரக்கறி மற்றும் பழவகைகளை பயன்படுத்தும் நுகர்வோரான பொதுமக்களுக்கு அவற்றை விநியோகிப்பதே இதன் நோக்கமாகும். இந்த வேலைத்திட்டத்தின் கீழ் ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி, 12 ஆம் திகதி ஆகிய இரு தினங்களில் சுமார் 9 இலட்சம் கிலோகிராமுக்கும் மேற்பட்ட (904,010) மரக்கறிகள் அரசாங்கத்தால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இதற்கு தேவையான நிதி நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்ட செயலாளர்கள் ஊடாக தற்பொழுது வழங்கப்பட்டுள்ளதுடன் பொருளாதார மத்திய நிலையம் மற்றும் பிரதேச செயலாளர் அலுவலக மட்டத்தில் மரக்கறி வகைகளை கொள்வனவு செய்யும் பணி ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அதேபோன்று, இந்த மரக்கறி வகைகள் அன்றைய தினமே நாடு முழுதும் விநியோகிக்கப்பட்டன.

மாவட்ட மட்டத்தில் மரக்கறிகளுக்காக பெரும் எண்ணிக்கையில் கேள்விகள் கிடைக்கப்பெற்றுள்ளன. உதாரணமாக கொழும்பு, கம்பஹா, களுத்துறை போன்ற மாவட்டங்களில் மாத்திரம் நுவரெலியா மரக்கறி வகைகளுக்காக 161,000 கிலோகிராமுக்கான கேள்வி கிடைத்துள்ளது. எதிர்காலத்தில் இதே வகையில் அரசாங்கம் விவசாய மக்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும். இதற்கமைவாக எந்த வகையிலும் விவசாயிகளின் அறுவடையை விற்பனை செய்ய முடியாமைக்கோ வீண் விரயமாவதற்கோ இடமளிக்க வேண்டாம் என்று அரசாங்கம் அனைத்து மாவட்டச் செயலாளர்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளோம் - என்றார். (ப)

## ஸ்ரீலங்கன் விமான சேவை தொடர்ந்தும் நிறுத்தம்

கொழும்பு,ஏப்.15

ஸ்ரீலங்கன் விமான நிறுவனமானது, தனது பயணிகள் போக்குவரத்துக்கான சேவையை இடைநிறுத்துவதற்கான காலத்தை ஏப்ரல் 30 ஆம் திகதி வரை நீட்டித்துள்ளதாக அறிவித்துள்ளது.

நாடு முழுவதும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்துவரும் நிலையிலேயே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனினும், சரக்கு விமான சேவைகள் அனைத்தும் தொடர்ந்து இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக விதிக்கப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, பயணிகள் விமான சேவையைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (ஐ-114)

## பசிபோக்க முயன்றவர் குளத்தில் மூழ்கிச் சாவு
### வவுனியாவில் சோகம்

வவுனியா,ஏப்.15

வாழ்வாதாரத்தைப் போக்க குளத்தில் மீன்பிடிக்கச் சென்றவர் நீரில் மூழ்கி உயிரிழந்த சோகச் சம்பவம் இன்று வவுனியாவில் இடம்பெற்றுள்ளது. வவுனியா மயிலங்குளத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. நான்கு பிள்ளைகளின் தந்தையான நகுலேஸ்வரன் (வயது43) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

வறுமைக்குட்பட்டு வாழ்ந்துவரும் சிதம்பரபுரம் பகுதியை சேர்ந்த நகுலேஸ்வரன் ஊரடங்குச் சட்டம் காரணமாக மிகவும் வறுமைக்குத் தள்ளப்பட்டுள்ளார். எனினும் தனது குடும்ப வாழ்வாதாரத்துக்காக மீன்பிடிப்பதற்கு சென்ற வேளை குளத்தில் மூழ்கினார். குளப் பகுதியில் நின்றவர்கள் அவரை மீட்டு 1990 அவசர நோயாளர் காவு வண்டியூடாக வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பினர். எனினும் அவர் ஏற்கனவே இறந்துள்ளார் என்று மருத்துவர்கள் அறிவித்தனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ப-110)



## குணசிங்கபுரத்துக்கு சற்றுமுன்னர் பூட்டு

கொழும்பு,ஏப்.15

கொழும்பு குணசிங்கபுர முஹந்திரம் ஒழுங்கை (மிஹிந்து மாவத்தை பின்புறம்) பகுதி சற்று முன்னர் மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொரோனா தொற்றுச் சந்தேகத்தில் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் தப்பி இந்தப் பகுதியில் தஞ்சமடைந்துள்ளார். அவருடன் பழகியிருந்த இருவர் சுகாதார பிரிவினரால் அழைத்துச் செல்லப்பட்டதையடுத்து இந்தப்பகுதி மூடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (க)

## குடும்பத் தலைவர் வவுனியாவில் சாவு
### தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் மீட்பு

வவுனியா,ஏப்.15

வவுனியாவில் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பத் தலைவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். வவுனியா கள்ளிக்குளம் பகுதியில் இன்று காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கள்ளிக்குளம் பகுதியைச் சேர்ந்த பெரியசாமி மோகனதாஸ் (வயது 38) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

வவுனியா கள்ளிக்குளம் பகுதியில் உள்ள அவரது வீட்டின் வளையில் அவர் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார். இன்று காலை அவரது சடலத்தை அவதானித்த அவரது உறவினர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கினார். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் சடலத்தை பார்வையிட்டதுடன், விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ப-110)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 15.04.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.